# Darma

தர்மா

Newsletter of Darma Muneeswaran Temple
VOLUME 36 October 2017
MCI(P)102/12/2012

The Temple Management
Committee wishes all devotees
A Prosperous Happy Deepavali!

பக்தர்கள் அனைவருக்கும் ஆலய
மேலாண்மைக் குழுவினரின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



Sri Maha
Munesswarar



Sri Darma Munesswarar



Sri Thava
Munesswarar



Sri Vaal
Munesswarar



Sri Siva
Munesswarar

## ஸ்ரீ சப்த முனீஸ்வரன் மாலா மந்திர மஹாயாகம்

## Sri Saptha Muneeswaran Maala Manthra Maha Yaagam

### 01-11-2017 - 05-11-2017


நமது ஆலயத்தில் அருளாட்சி செய்துவரும், ஸ்ரீ தரும முனீஸ்வரர் திருவருளால், நிகழும் ஹேவிளம்பி ஆண்டு, கார்த்திகை திங்கள் பதின்மூன்றாம் நாளான 01.11.2017 புதன்கிழமை முதல் 05.11.2017 ஞயிற்றுக்கிழமை வரை ஸ்ரீ சப்த முனீஸ்வரர் மாலா மந்திர மஹாயாகமும், தங்கள் கைகளினால் பக்தர்கள் செய்யக் கூடிய திரிசூல பூஜையும் நடைபெறத் திருவருள் கூட்டி வைத்துள்ளது.



Sri Jada
Munesswarar



Sri Nadha
Munesswarar



AADI POORAM - ஆடிப்பூரம்

18.07.2017 - 26.07.2017




SUMANGALI POOJAI

சுமங்கலிப் பூஜை

06.08.2017






AAVANI SUNDAY PAALKUDAM - ஆவணி ஞாயிறுப் பால்குடம்


20.08.2017

## GURU PEYARCHI – 2017
## SRI GURU BAGAWAN MOOLAMANTHIRA PARIHARA HOMAM PARIHARA ARCHANAI

குரு பெயர்ச்சி 02.09.2017

ஸ்ரீ குரு பகவான் மூலமந்திர பரிஹார ஹோமம் பரிஹார அர்ச்சனை




## SRI VINAYAGAR CHARTHURTI ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி

25.08.2017



## ஒரு வாசகமே கல்வி பற்றிய திருவாசகம்

உள்ளத்தைப் பண்படுத்துவது கல்வி, உடலை அலங்கரிப்பது அல்ல. அதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குவது வள்ளல் பெருமானாராம் இராமலிங்க சுவாமிகளின் சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்! இந்தப் பூமியில் எல்லா உயிர்கள் வாழ்ந்தபோதிலும், மனிதனானவன், தன்மையும் தமக்கு ஆதாரமான தலைவனையும் அறியும்போது மட்டுமே, வாழ்பவன் ஆகிறான். அது ஒரு வகைக் கல்வி.

இறை மீது வைக்கும் பற்றினால், பக்தியினால் மனம் உருகி, கண்கள் விழிநீர் உகுத்துத் தொழுதல், மமதை இல்லதிருத்தல், எல்லா உயிர்களிடத்தும் கருணையுடன் இருத்தல் ஆகியவை, எல்லா மனிதர்களும் அன்றாடம் கடைப்பிடிக்கும் நற்செயல்களுக்கு ஆதாரமாக விளங்கும் கல்வியாகும்!

மனம் தாழ்ந்த உணர்ச்சிகளை வென்றால் மட்டுமே சாதனைகள் செய்ய இயலும். உணர்ச்சிக்கு அடிமை ஆகின்றவனும், புலனின்பத்தில் முழ்கியவனும் இறை மீது வைக்கும் அன்பு நிலைத்து நிற்பதில்லை! இறை மீது ஆசை வைப்பதும் இன்ன பிறவற்றின் மீது ஆசை வைப்பதும் வேறு வகையான ஆதாரக் கல்வி! முதல் வகை உத்தமமானது! இரண்டாம் வகை உண்மையற்றது!

# Singapore's 1st National Yoga Sports Competition





Singapore's 1st National Yoga Sports Competition was held at The Serangoon Community Club on 28th May 2017. Organised jointly by The Yoga Sports Singapore , The Serangoon IAEC and by Darma Muneeswaran Temple. Students from the temple's 'The Yogaa Team' were given a platform to showcase their talents in various categories like Yogasana, Artistic Yoga, Rhythmic Yoga and Free Flow Yoga. The students were exhilarated to participate in their first ever national competition and made the temple and themselves proud by winning the top prizes in the competition. Winners of the competition, were given the opportunity to represent Singapore in the 7th Asian Yoga Sports Championships 2017. Twenty students from our temple represented Singapore in the championships. The competition was held at The Kallang Community Centre from 28th to 30th July 2017 and saw participants from 8 Asian countries i.e India, Sri Lanka, Vietnam, Malaysia, Taiwan, Hong Kong, UAE (Dubai) and Iran. Singapore came in 3rd overall placing. It was the first time that our students were exposed to an International event. They gained valuable insights from the championships.



## Passion Arts Indian Traditional Arts Festival




The inaugural Passion Arts Indian Traditional Arts Festival was held at the Ci Yuan Community Club It was an exploratory journey to understand the rich Indian culture and performing arts of the different sub-ethnic groups of the Indian community in Singapore An outdoor Indian traditional art and culture display and a specially-choreographed musical-storytelling journey conducted in English and accompanied by a live orchestra kept the audience enthralled. The musical narrated the rich heritage of the different sub-ethnic origins of the local Indian community and how the rich Indian traditions and traditional arts have been preserved in our multi-cultural society. Rhythm Aesthetic Society who are our temple's resident dance and music coordinators/ teachers, choreographed and orchestrated the India cultural event. Students from our temple participated in the event.





## 13th Mother's Day Celebration

The 13th Mother's Day celebration was held on 20th May 2017 at the Serangoon Garden's Country Club. This year the response from the families was quite encouraging. One of our regular participant who has been with us for all our Mother's Day's celebrations commented "this was the best celebrations so far in terms of the food , entertainments and stage decorations, I am eagerly waiting for next year's Mother's day celebrations"

## Bolly Dazz Every Wednesday







## Navarathiri 2017















## Walk at Labrador Park

The temple social activity group organised a walk at Labrador Park reserve on 25th June 2017. A total of 20 people of all ages participated in this walk which comprised of hike, visiting the Bristish guns installation sites, and silos at the park. There were also some sporting activities for the children







# தமிழ் நாட்டின் பிரசித்தி பெற்ற பதினெட்டு சித்தர்கள் வரலாறு - கோரக்கர்



தர்மா காலாண்டுச் சஞ்சிகையில் இன்று பதினென் சித்தர்களுள் ஒருவரான கோரக்கர் பற்றிய சிறு குறிப்புகளை அறிந்துகொள்வோம். கார்த்திகை மாதம் ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர் கோரக்கர் எனச் சித்தர் போகர் கூறியிருக்கிறார். கோரக்கர், மராட்டிய இனத்தவர். ஆயினும் தமிழ்நாட்டின் சதுரகிரியை நோக்கிப் பயணம் மேற்கொண்டபோது, போகரைத் தோழராகப் பெற்றார். சட்டைமுனி, கொங்கணர் சித்தர்கள் ஆகியோரும் இருவருக்கு நெருக்கமானவர்கள் என்பதற்கு ஆதாரமும் இருக்கின்றது.

ஒரு முறை சிவபெருமான் கடற்கரையில் உமாதேவிக்கு தாரக மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருந்த பொழுது, தேவி சற்று கண்ணயர்ந்தார்களாம். அந்நேரம், சிவபெருமான் உரைத்த தாரக மந்திரத்தை, ஒரு மீன் குஞ்ச கேட்க நேரிட்டு, அது மனித வடிவமடைந்ததாம். மச்சேந்திரன் என அதற்குப் பெயர்ட்ட சிவபெருமான், சிறந்த சித்தராகி ஞானத்ததைப் பரப்புமாறு மச்சேந்திரனுக்கு அருள்புரிந்தார். மச்சேந்திரனும் அவ்வாறே ஒப்பற்ற சித்தரானார்.

ஒரு முறை ஓர் ஊரைச் கடந்து சென்றுகொண்டிருக்கையில், இவருக்குப் பெண்ணொருத்தி இவருக்கு மனக்குறையோடு பிச்சையிட்டாள்! மச்சேந்திரர் அப்பெண்ணுக்கு ஏற்பட்ட துன்பம் யாதென வினவினார். தாம் மகப்பேறின்றி வருந்துவதாக அவள் கூறினாள். மச்சேந்திரர் சிறிது திருநீறைக் கொடுத்து “இதை உட்கொள்வாயானால், மகப்பேறு அடைவாய்” எனக் கூறிச் சென்றார். தமக்குக் கிடைத்த திருநீறு பற்றி அண்டைவீட்டுப் பெண்ணிடம் கூறினாள் முதல் பெண். விபூதி கொடுத்தவர் போலித் துறவியாய் இருக்கலாம். எனவே விபூதியை உட்கொள்ளவேண்டாம் எனத் தோழி சொன்னாள். இதனால் அச்சமடைந்த பெண், பெற்ற திருநீறை அடுப்பில் கொட்டினாள்.

பல்லாண்டுகள் ஆன பின் மச்சேந்திரர் மீண்டும் அவ்வூருக்கு வந்தார். தாம் முன்பொரு காலம், ஆசீர்வதித்தளித்த திருநீறு பெற்ற பெண் வீட்டிற்குச் சென்று “உன் மகளை நான் பார்க்க வேண்டும். அவளை அழைப்பாயாக”, என்று கூறினார். தோழியின் தவறான பேச்சைக் கேட்டு, ஸ்வாமி அன்புடன் அளித்த விபூதியை உண்ணாமல் அடுப்பில் வீணே போட்டு, இன்னமும் மகன் .ல்லாமல் வருந்தும் நிலை கூறி, மன்னிக்குமாறு வேண்டினாள் அப்பெண். விபூதியை எங்கு கொட்டினாய் என்று கேட்ட மச்சேந்திரர். அவள் கொட்டிய விபூதி இருந்த அடுப்பின் சாம்பலைக் காட்டினாள். மச்சேந்திரரோ அடுப்பருகே நின்று, “கோரக்கா” எனக் கூப்பிட்டார்.

அடுப்பு சாம்பலிலிருந்து குழந்தை ஒன்று, சித்தர் திருநீறுடன் கொடுத்த முழு வளர்ச்சியுடன் வெளிப்பட்டது. அந்தக் கோதார அடுப்பின் சாம்பலிலிருந்து வெளிப்பட்டதால் கோரக்கர் எனப் பெயரிட்டு, பிள்ளையைச் சீடனாக ஏற்றுக் கொண்டார் மச்சேந்திரர். ஒருநாள் கோரக்கர் ஒரு வீட்டிற்குச் சென்று பிச்சை கேட்டார். அந்த வீட்டுப் பெண்மணி வடையைக் கொடுத்தாள். அந்த வடையை கோரக்கர் மச்சேந்திரருக்கு தாம் பெற்ற பிரசாதமாகக் கொடுத்தார். வடை தின்ற மச்சேந்திரர் மறுநாளும் வடை வேண்டும் எனக் கேட்டார். கோரக்கரும், வடை தந்த வீட்டிற்கே மீண்டும் பிச்சை கேட்டுச் சென்றார். ஆனால் அப்பெண்ணொ வடை இல்லை எனச் சொல்லி, சோறு போட்டாள. கோரக்கரோ, குருவிற்கு வடைதான் வேண்டும் என்றார். அப்பெண்ணிற்கு கோபம் வந்தது. எது இருக்கிறதோ அதைதைதானே போட முடியும் எனக் கோபமாகக் கேட்டாள்.

உன் குரு வடை கேட்டதால் போயிற்று! இதுவே உன்னுடைய கண்ணை இழக்க வேண்டுமென்று கேட்டால் அவருக்குத் தருவாயா எனக் கேட்டாள். குருநாதர் என் கண்ணைக் கேட்டாலும் தருவேன். அந்தக் கண்ணை நீயே பெற்றுக் கொண்டு வடையைக் கொடு எனக் கூறி, தம் கண்ணைப் பெயர்த்து அப்பெண்ணிடம் கொடுத்தார் கோரக்கர். அச்சம் கொண்டு மாது, உடனே வடைகளைச் சுட்டுக் கொடுத்தாள். வடையை கோரக்கர் தம்முடைய குருவிற்களித்தார். வடைகளைச் சுவைத்த மச்சேந்தரர், உன் கண் எனகே எனக் கோரக்கரைக் கேட்டார். சீடனும் நடந்ததைக் கூறினான்.

கோரக்கர், தம்மீது வைத்த அன்பை உணர்ந்து மச்சேந்திரர், சீடன் இழந்த கண்ணை திரும்பப் பெறுமாறும் செய்தார். மலையாள நாட்டிற்குச் சென்ற மச்சேந்திரர், அந்நாட்டு அரசி பிரேமலா என்பவளை மணந்து இல்வாழ்க்கை நடத்திவந்தார். இவர்களுக்கு மீனநாதன் என்னும் குழந்தை பிறந்தான. தன் குருவை எப்படியும் தம் நாட்டிற்கு அழைத்து வரவேண்டுமென்று மலையாள நாட்டை அடைந்தார் கோரக்கர். மச்சேந்திரரைக் கண்டு, இருப்பிடத்திற்கு அழைத்தார். வழிச்செலவிற்கு வேண்டும் என, பிரேமலா ஒரு தங்கக் கட்டியை பையிலிட்டு கோரக்கர் அறியாமல் மச்சேந்திரரிடம் கொடுத்தார். மச்சேந்திரருக்குத் தெரியாமல் அவர் பையிலிருந்த தங்கக்கட்டியை எடுத்து எரித்துவிட்டு, அதற்குப் பதிலாக ஒரு கல்லை வைத்தார்.

பையில், தங்கக்கட்டி இருக்கிறதா எனத் திறந்து பார்த்தபொழுது தங்கத்திற்கு பதிலாக கற்கள் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார் மச்சேந்திரர். கோரக்கர் மீது கோபம் கொண்டார்.

“என்னுடைய பொருளை கைப்பற்றிக் கொண்டாயே. நீ எனக்குச் சீடனில்லை” எனக் கூறினார். குருவை நல்வழிப்படுத்த, கோரக்கர் மலை மீது ஏறி சிறுநீர் கழித்தார். உடனே அந்த மலை முழுவதும் தங்கமலை ஆனது. கோரக்கர் குருவைப் பார்த்து தம் பொருளை எடுத்துக் கொள்ளக் கேட்டுக்கொண்டார். மச்சேந்திரரைப் பிடித்த மாயை விலகிற்று. தெளிவு பெற்ற குரு, சீடரை வெகுவாகப் பாராட்டினார். அதன் பிறகு, குருவைப் பிரிந்து தனியே சென்ற கோரக்கர், தவம் புரிந்து அஷ்டமா சித்திகளையும், காய சித்திகளையும் பெற்றார்.

கோரக்கர் செய்த நூல் “கோரக்கர் வைப்பு”. மீன் குஞ்சு வடிவத்தில் மச்சேந்திரர் கேட்ட தாரக மந்திரமே ஞானசர நூல் என்றும் கூறுவர்!



## கயிலையினும் உயர்ந்த இடம்

குரு ஒருவர் தம் சீடர்கள் அறியா வண்ணம் வெளியே சென்று வருவார். குருநாதர் எங்கு செல்கிறார் என்பதை அறிய சீடர்களுக்கு ஆர்வம் அதிகம். குரு தனிமையான இடத்தில் தியானத்தில் ஈடுபடலாம் என்றான் ஒருவன். எங்காவது உண்ணச் செல்வாரோ என்றான் வேறொருவன். நமக்குத் தெரியாமல் ஏதாவது ரகசியக் கேளிக்கையில் ஈடுபடுகிறாறோ என்றான் வேறொருவன். குருவைப் பின்தொடர அனைவரும் ஒப்புக்கொண்டனர். அவ்வாறே செய்தனர். குருவும் ஒரு குடிசைக்குள் துழைந்தர். சீரர்கள் எட்டிப் பார்த்தனர். உள்ளே கயிற்றுக் கட்டிலில் வயதான மூதாட்டி வலுவின்றிப் படுத்துக் கிடந்தாள். அந்த அம்மையாரின் படுக்கையை மாற்றி, அவருக்கு உணவும் ஊட்டிவிட்டார் குருநாதர்.

சீடர்களின் கண்களில் கண்ணீர் மல்கிற்று...

அனைவருமே தங்களைத் தாங்களே நிந்தித்துக் கொண்டனர். கதையின் கருத்து என்னெனில், அன்பின் வழி, வாழ்பவரின் உடலே, உயிர நிலைத்து வாழும் உடலாகும். அன்பைச் சந்தேகிக்கும் மானுடர்களின் உடல்கள், எலும்புகளைத் தசையால் மூடி வைத்திருக்கும் வெற்றுடம்புகளாகும்!

# Tackling Diabetes - One Change At A Time

A national approach has been undertaken to combat the rise of diabetes amongst Singaporeans. It has been estimated that by year 2030, the number of Singapore residents above 40 with diabetes is projected to increase by another 200,000 (from about 400,000 today). Based on figures from the National Registry of Diseases, in 2014, about 1 in 2 heart attack cases had diabetes; 2 in 3 new kidney failure cases were due to diabetes; and 2 in 5 stroke cases had diabetes.

**Simple lifestyle changes and management habits can be picked up to improve our quality of life.**

### Type 2 Diabetes Prevention

* Follow a proper diet. Besides insulin and medicine, eating healthily helps to control blood glucose levels and weight.
* Maintain a healthy weight. If overweight, losing a few kilos can reduce the risk of diabetes.
* Get regular exercise. Exercise helps to control weight and also keeps the heart healthy.

### Diabetes Management

* Consume whole grains such as Brown Rice or Low GI Rice as a replacement to White Rice
  - Consider adding grains like Oatmeal and Quinoa to your diet.
* Pick protein-rich foods which are lower in fat and cholesterol
  - Consider lean meat, fish & yogurt
* Have fruits and vegetables as part of your regular diet
* Lower and avoid oil, fat, salt and sugar




Do you know if you are at risk of Type 2 Diabetes & between ages 18 - 39?
Visit the link below to get your Diabetes Risk Assessment.
www.healthhub.sg/programmes/DRA
Sources:
Ministry of Health Singapore
SingHealth

## சிங்கப்பூர் சைவசித்தாந்த சங்கம் முன்னெடுத்த சமய உழுவாரம் 2017



ஆன்மாவின் அறிவு நிலையை உயர்த்தி, பின்னர் ஆட்கொண்டு, ஆனந்தம் அளிப்பதே ஆண்டவன் நோக்கம். அதற்காகவே அப்பெருங்கருணையாளன் உடல்களையும் உலகங்களையும் படைத்து அருளினான். ஆயினும், ஆன்மாவிற்கு தொன்றுதொட்டே உள்ள குற்றமாகிய ஆணவம் என்னும் பந்தம், ஆண்டவனின் உயர்ந்த நோக்கத்தை அன்மாவிடமிருந்து மறைத்து, உலகப் பொருள்கள் மீது பற்றுகொள்ளச் செய்கின்றது. ஆன்மவர்க்கத்தில் அறிவிற்சிறந்ததாகக் கருதப்படும் மனிதகுலம், எல்லையற்ற பற்றுகளில் உழல்வதோடு, தன் குறைபாடுகளைக்களையவேண்டியும், இன்பங்களைப் பெருக்கவேண்டியும் ஆலயங்களுக்குச் செல்லத்தவறுவதில்லை. அநேக பூசனைகளின்வழி வேண்டுதல்கள் அண்டவன்முன் வைக்கப்படுகின்றன. “வேண்டுவார் வேண்டுவதே ஈவான்” என்றபோதும், வேண்டத்தக்க பொருள் யாதென்று சிந்தித்தல் நம் கடனாகிறது.



வழிபாட்டினை அறிவுசார்ந்ததாகவும், அன்புசார்ந்ததாகவும் ஆற்றுகின்ற உத்தியினை நமக்கு வழங்கும் அற்புத நூல்களாக விளங்குவன பன்னிரு திருமுறைகள். வழிபாட்டுக்குரிய பொருளையும், வழிபாடு செய்யும் முறையையும், வழிபாட்டின் பயனையும் இந்நூல்கள் செந்தமிழில் தருகின்றன.



தமிழ்நாட்டின் தலைசிறந்த ஓதுவாமூர்த்திகளுள் ஒருவரான, தேவார இசைமணி திரு சண்முக திருவரங்கயாதி அவர்களை சிங்கப்பூருக்கு முறையாக அழைத்து, “சமய உழவாரம்” என்னும் தலைப்பில் நின்று, திருமுறைகளை ஓதி வழிபாடாற்றும் முறைமையை, திருமுறைப் பண்ணிசை நிகழ்ச்சிகள் வாயிலாகவும், திருமுறைச் சொற்பொழிவுகள் வாயிலாகவும், திருமுறைச் செயற்பட்டறைகள் வாயிலாகவும், இளையர்களுக்கும், பெரியவர்களுக்கும் வழங்கியது சிங்கப்பூர் சைவசித்தாந்த சங்கம். 21-08-2017 முதல் 05-09-2017 வரை, செராங்கூன் வடக்கு அருள்மிகு தருமமுனீசுவரன் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுகளுக்கு, பல்வேறு தரப்பினர் தொடர்ந்து வந்து பயனடைந்தனர். குறிப்பாக, இளையர்களுக்கு திருமுறைகள் விளக்கிச் சொல்லப்பட்டன. பலரும், தத்தம் ஐயங்களைச் களைந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

## கவிநயம்

கவிதை என்பது கலைவடிவம். கவிதை வடிக்க கற்பனை வளம் வேண்டும், நீரோடையென ஓடும் சொல்நயம் வேண்டும். கேட்போர் கேட்டவுடன் மனதில் பற்றிக்கொள்ளும் திறனும் வேண்டும். கவிதை என்பது தங்கச் சுரங்கம் போன்றது. அதல் தோண்டத் தோண்ட எண்ணற்றவை வெளிப்படும். அந்தச் சிந்தனை அரங்கத்திலிருந்து கூன் நிறைந்த ஒட்டக விலங்கு பாலைவனப் படகாகும். அருவியோ நெஞ்சு நிமிர்ந்த நதிபோலத் தோன்றும். செடிகளை ஆட்கொள்ளும் நட்டுவாங்கமாக காற்று உரு மாறும். கண்ணில் மின்னும் மின்னல் ஒளியோ, வான் பொய்கையில் தாவும் கெண்டை மீனாகும்!

கவிதையை எழுதியவன் அதன் கவிஞன். கவிதைக்குள்ளும் (அந்தச் சொல்லுக்குள்) கவி இருக்கின்றான். கவிதையின் உட்பொருள் விதையாக இருக்கம் பொழுது, அது க ‘விதை’ க்குள்ளம் இராதா என்ன? கவிதையின் ‘வி’ என்னும் கற்பனை தென்படும். அதை மேலும் உரித்துப் பார்த்தால், வாழ்க்கையில் கிழிந்த இதயங்களைத் தைக்கும் ‘தை’ என்னும் செய்கையும், வெள்ளி போல் முளைப்பதும் தெரியும்!







# DMT ACADEMY

| Classes | Fee | Day | Time |
|---|---|---|---|
| Please approach temple counter staff for information on classes. | | | |
| Hatha Yoga/அட்டாங்க யோகா (ladies only) | $60 Individual | Monday | 7.30pm-8.30pm |
| | $120 family | Monday | 7.30pm-8.30pm |
| Violin & Keyboard/வயலின் கீபோர்ட் | | Wednesday | 6pm - 9pm |
| Free Homeopathy Counseling & Treatment / ஹோமியோபதி (by appoinment) | | Wednesday | 6pm - 8pm |
| Kundalini Yoga/குண்டலினி யோகா | | Thursday | 7pm - 9pm |
| Kindergarten Tamil Tuition/பாலர் வகுப்பு K1 & K2 | $5 | Friday | 7.30pm-8.30pm |
| Reading Class Tamil/வாசிப்பு வகுப்பு (தமிழ்) K1 & K2 | FOC | Friday | 8pm - 9pm |
| Bharathanaatiyam/பரதநாட்டியம் | | Friday | 7pm - 9pm |
| Bhajans/பஜனை | | Friday | 8.30pm |
| Tamil Tuition/ தமிழ்த் துணைப்பாட வகுப்பு Pri 1, Pri 2, | $5 | Saturday | 10am - 11.30am |
| Pri 3, Pri 4, Pri 5 | | Saturday | 11.30am - 1pm |
| Pri 6 | | Fridays | 8pm - 9pm |
| Hatha Yoga / அட்டாங்க யோகா | $35 children | Saturday | 1.30pm - 2.45pm |
| | $60 Individual | Saturday | 1.30pm - 2.45pm |
| | $120 family | Saturday | 1.30pm - 2.45pm |
| Gentle Yoga / முதியோருக்கான யோகா | $30 seniors | Saturday | 12pm - 1pm |
| Saiva Siddhantha Level 1 Classes/சைவ சித்தாந்த வகுப்பு முதல் நிலை | FOC | Saturday | 3.30pm - 5pm |
| Saiva Siddhanta Level 2 Classes/சைவ சித்தாந்த வகுப்பு 2ம் நிலை | | Saturday | 5.30pm - 7pm |
| Saiva Siddhanta Level 3 Classes/சைவ சித்தாந்த வகுப்பு 3ம் நிலை | | Saturday | 7pm - 9pm |
| Sangeetham/சங்கீதம் | $45 | Saturday | 2pm - 7.30pm |
| Bakthi Class/பக்தி இந்து சமய வகுப்பு | $25 | Sunday | 9am - 11am |
| Thevaaram/தேவாரம் | $10 | Sunday | 1pm - 4pm |
| Hatha Yoga/அட்டாங்க யோகா | $60 adults | Sunday | 8am - 9.30am |
| | $120 family | Sunday | 8am - 9.30am |
| Sangeetham/சங்கீதம் | $45 | Sunday | 4pm - 5pm |
| Miruthangam,Tabla/மிருதங்கம், தபேலா | $45 | Sunday | 9am - 1pm |







## நால்வகைப் புலமைகள்




தமிழ்ச் செய்யுள் புலமை பெற்றவர்கள் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கப்படுவார்கள். பாடும் என்ற அளவில் பாடுபவர் ஆசுகவி. உயரிய கருந்ததுகளை இனிய தமிழால் பாடுபவர் மதுரகவி. சித்திரம் போல பாடல் வடித்துப் பாடுபவர் சித்திரக் கவி. நீள விரித்து, பிரித்துப் பாடும் புலமை பெற்றவர் வித்தாரகவி. இதுவே பெறும் திறமைவென நாம் நினைத்திருக்க, அவை நான்கையும் ஒன்றாகப் பாடும் வல்லமை பெற்றவராகத் திகழ்ந்தவர் திரு அருட்பிரகாச வள்ளலார் ஆவார்கள். நின்நிலையை என் அருளால் நூ உணர்ந்து நின்று அடங்கின் எனப் பாடி ஆசுகவி ஆனார். அருட்பெருஞ்சோதி அகவலில் 1596 அடிகள் கொண்ட நீண்ட ஆசிரியப்பாவைப் பாடி அவர் வித்ராகவி ஆனார். வள்ளலாரின் அனைத்துப் பாடலும் அவரை மதுரகவி என்றே பறை சாற்றுகின்றன.

## DMT Bursary 2018 & Munneru! 2017

The Temple will continue its support for needy students with the annual Bursary and Munneru! Awards. Bursary forms will be available at the Temple counter from November 2017. Current bursary students should submit their results by end November 2017 to qualify for Munneru! Award 2017.

## Editorial Team

- A Mathivanan
- Poobalan Naidu
- N.S. Narayanan
- M Jaya Devi
- Meenatchi Sabapathy
- Soma Prasad
- Premnath

Designed & Printed by Graphicc Zone Tel: 62565747